ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

பன்னிருநாமம்

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

பன்னிருநாமம்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

பன்னிரு நாமம் திருவத்தியூர்ப் பரன் பாதம் என்று ⋆
நன்னிற நாமம் படை திக்கி யாவையும் நாம் அறியத் ⋆
தென்னந் தமிழ்த் தொடைச் சீரார் கலித்துறை ஓதி ஈந்தான் ⋆
மின்னுறு நூல் அமர் வேங்கடநாதன் நம் தேசிகனே

கார் கொண்ட மேனியன் பாதாம்புயத்தைக் கருத்திருத்தி ⋆
ஏர் கொண்ட கீர்த்தி இராமாநுசன் தன் இணை அடி சேர் ⋆
சீர் கொண்ட தூப்புல் திருவேங்கடாரியன் சீர் மொழியை ⋆
ஆர் கொண்டு போற்றினும் அம்மால் பதத்தை அடைவிக்குமே

‡ கேசவனாய் நின்று ⋆
கீழைத் திசையிலும் நெற்றியிலும் ⋆
தேசுடை ஆழிகள் நான்குடன் ⋆
செம் பசும் பொன் மலை போல் ⋆⋆
வாசி மிகுத்தெனை ⋆
மங்காமல் காக்கும் மறை அதனால் ⋆
ஆசை மிகுத்த ⋆
அயன் மக வேதியில் அற்புதனே ॥ **1** ॥

நாரணனாய் ⋆
நல் வலம் புரி நாலும் உகந்தெடுத்தும் ⋆
ஊரணி மேகம் எனவே ⋆
உதரமும் மேற்கு நின்றும் ⋆⋆
ஆரண நூல் தந்தருளால் ⋆
அடைக்கலம் கொண்டருளும் ⋆
வாரண வெற்பில் ⋆
மழை முகில் போல் நின்ற மாயவனே ॥ **2** ॥

மாதவ நாமமும் ⋆
வான் கதை நான்கு மணி நிறமும் ⋆
ஓதும் முறைப்படி ஏந்தி ⋆
உரத்திலும் மேலும் நல்கிப் ⋆⋆
போதலர் மாதுடன் ⋆
புந்தியில் அன்பால் புகுந்தளிக்கும் ⋆
தூதனும் நாதனுமாய ⋆
தொல் அத்திகிரிச் சுடரே ॥ **3** ॥

கோவிந்தன் என்றும் குளிர் மதி ஆகிக் ⋆
கொடியவரை ⋆
ஏவும் தனுக்களுடன் ⋆
தெற்கிலும் உட்கழுத்து நின்று ⋆⋆
மேவும் திருவருளால் ⋆
வினை தீர்த்தெனை ஆண்டருளும் ⋆
பூவன் தொழ ⋆
அத்தி மா மலை மேல் நின்ற புண்ணியனே ॥ **4** ॥

விட்டு வல வயிற்றின் கண் ⋆
வடக்கும் விடாது நின்று ⋆
மட்டவிழ் தாமரைத் தாது ⋆
நிறம் கொண்ட மேனியனாய்த் ⋆⋆
தொட்ட கலப்பைகள் ⋆
ஈர் இரண்டாலும் துயர் அறுக்கும் ⋆
கட்டெழில் சோலைக் ⋆
கரிகிரி மேல் நின்ற கற்பகமே ॥ **5** ॥

மதுசூதனன் என் வலப்புயம் ⋆
தென் கிழக்கென்றிவற்றில் ⋆
பதியாய் இருந்து ⋆
பொன் மாதுறை பங்கய வண்ணனுமாய் ⋆⋆
முது மா வினைகள் அறுக்கும் ⋆
முயலங்கள் ஈர் இரண்டால் ⋆
மதுவார் இளம் பொழில் ⋆
வாரண வெற்பின் மழை முகிலே ॥ **6** ॥

திருவிக்கிரமன் திகழ் தீ நிறத்தன் ⋆
தெளிவுடை வாள் ⋆
உருவிக் கரங்களில் ⋆
ஈர் இரண்டேந்தி வலக் கழுத்தும் ⋆⋆
செரு விக்கிரமத்தரக்கர் திக்கும் ⋆
சிறந்தாளும் இறை ⋆
மருவிக் கரிகிரி மேல் ⋆
வரம் தந்திடும் மன்னவனே ॥ **7** ॥

வாமனன் என் தன் வாமோதரமும் ⋆
வாயுவின் திசையும் ⋆
தாமம் அடைந்து ⋆
தருண அருக்கன் நிறத்தனுமாய்ச் ⋆⋆
சேமமரக்கலம் ⋆
செம் பவி ஈர் இரண்டால் திகழும் ⋆
நாமங்கை மேவிய ⋆
நான் முகன் வேதியில் நம் பரனே ॥ **8** ॥

சீரார் சிரீதரனாய்ச் ⋆
சிவன் திக்கும் இடப் புயமும் ⋆
ஏரார் இடம் கொண்டு ⋆
இலங்கு வெண் தாமரை மேனியனாய்ப் ⋆⋆
பாராய பட்டயம் ⋆
ஈர் இரண்டாலும் பயம் அறுக்கும் ⋆
ஆராவமுது ⋆
அத்தி மா மலை மேல் நின்ற அச்சுதனே ॥ **9** ॥

என் இருடிகேசன் இறை கீழ் ⋆
இடக் கழுத்தென்றிவற்றில் ⋆
நன்னிலை மின் உருவாய் ⋆
நாலு முற்கரம் கொண்டளிக்கும் ⋆⋆
பொன் அகில் சேர்ந்தலைக்கும் ⋆
புனல் வேகை வட கரையில் ⋆
தென்னன் உகந்து தொழும் ⋆
தேனவேதியர் தெய்வம் ஒன்றே ॥ **10** ॥

எம் பற்பநாபனும் ⋆
என் பின் மனம் பற்றி மன்னி நின்று ⋆
வெம் பொன் கதிரவன் ஆயிரம் ⋆
மேவிய மெய் உருவாய் ⋆⋆
அம் பொன் கரங்களில் ⋆
ஐம் படை கொண்டஞ்சல் என்றளிக்கும் ⋆
செம் பொன் திரு மதிள் சூழ் ⋆
சிந்துராசலச் சேவகனே ॥ **11** ॥

‡ தாமோதரன் என் தன் தாமங்கள் ⋆
நாலு கரங்களில் கொண்டு ⋆
ஆமோ தரம் என ⋆
ஆகத்தின் உட்புறம் பின் கழுத்தும் ⋆⋆
தாம் ஓர் இளம் கதிரோன் என ⋆
என்னுள் இருள் அறுக்கும் ⋆
மா மோக மாற்றும் ⋆
மதிள் அத்தியூரின் மரகதமே ॥ **12** ॥

‡ கத்தித் திரியும் கலைகளை வெல்லும் ⋆
கருத்தில் வைத்துப் ⋆
பத்திக்குறு துணை ⋆
பன்னிரு நாமம் பயில்பவர்க்கு ⋆⋆
முத்திக்கு மூலம் எனவே மொழிந்த ⋆
இம்மூன்று நான்கும் ⋆
தித்திக்கும் எங்கள் ⋆
திரு அத்தி ஊரரைச் சேர்பவர்க்கே ॥ **13** ॥

அடிவரவு — கேசவன் நாரணன் மாதவநாமம் கோவிந்தன் விட்டு மதுசூதனன் திருவிக்கிரமன் வாமனன் சீரார் என்னிருடிகேசன் எம்பற்பநாபன் தாமோதரன் கத்தி நாவலர்

பன்னிருநாமம் முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்